Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 238 | உள்ளூர் - 26.08.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 238 | வெளியூர் - 27.08.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**பணத்தட்டுப்பாட்டை விரட்டும் வாஸ்து!** | **ஆட்டோக்களுக்கு புதிய கட்டணம்!** | **தனுஷ் கட்சிக்கு 5 பெயர்கள் பரிசீலனை!** | **புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!**

## பிரம்மாண்ட பயணம் வரும் ஜின்பிங்!



சீனா, ஆக. 26–

சீன அதிபர் ஸீ ஜின்பிங், சுமார் 7 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. டெல்லியில் செப்டம்பர் 12, 13 ஆகிய தேதிகளில் நடைபெற வுள்ள BRICS உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கிறார். இந்தப் பயணம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வழக்கத்தைவிட அதிகமாக, சுமார் 400 பேர் கொண்ட அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் குழுவுடன் ஜின்பிங் இந்தியா வரக்கூடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. 2019–ல் அவர் இந்தியா வந்தபோது 200–க்கும் குறைவான அதிகாரிகளே உடன் வந்திருந்தனர். தற்போது சீன அதிகாரிகள் டெல்லியில் ஹோட்டல், பாதுகாப்பு உள்ளிட்ட ஏற்பாடுகளை இறுதி செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

2020 கல்வான் பள்ளத்தாக்கு மோதலுக்குப் பிறகு இந்தியா–சீனா உறவில் கடும் விரிசல் ஏற்பட்டது. இரு நாட்டு தலைவர்களிடையேயான நேரடி தொடர்பும் குறைந்தது. இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடியின் சீனா பயணத்துக்குப் பிறகு ஜின்பிங்கின் இந்திய வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சீனா சென்று, வெளியுறவு அமைச்சர் வாங் யி உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளுடன் எல்லை அமைதி, பொருளாதாரம் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

BRICS அமைப்பில் இந்தியா தற்போது தலைமை வகிக்கும் நிலையில், மாநாட்டுக்கு சீனா முழு ஆதரவு அளிப்பதாக தெரிவித்துள்ளது. எல்லைப் பிரச்சினை, வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகளை மீண்டும் வலுப்படுத்துவது ஆகியவை இந்த சந்திப்பில் முக்கிய விவாதங்களாக அமையலாம்.

அமெரிக்காவின் வர்த்தகக் கொள்கைகள் உள்ளிட்ட சர்வதேச சவால்களுக்கு மத்தியில், இந்த ஜின்பிங் பயணம் இந்தியா–சீனா உறவில் புதிய அத்தியாயத்திற்கான அரசியல் சமிக்ஞையாக பார்க்கப்படு கிறது. எனினும், அவரது இறுதி பயணத் திட்டமும் மோடி–ஜின்பிங் இருதரப்பு சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரலும் இன்னும் முழுமையாக இறுதி செய்யப்படவில்லை.

## மேட்டூர் அணை
# 28-ம் தேதி திறக்க திட்டம்? 90 அடியை நெருங்கிய நீர்மட்டம்!
## விஜய் பயண ஏற்பாடுகள் தீவிரம்!!




சென்னை, ஆக. 26–

காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையை ஆகஸ்ட் 28–ம் தேதி திறக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், 90 அடியை நெருங்கியுள்ளது. ஆகஸ்ட் 25 நிலவரப்படி நீர்மட்டம் 88.43 அடியாகவும், அணைக்கு வினாடிக்கு 10,807 கனஅடி நீர் வந்து கொண்டிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வழக்கமாக குறுவை சாகுபடிக்காக ஜூன் 12–ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு போதிய நீர் இருப்பு இல்லாததால் திறக்கப்படவில்லை. இதனால் டெல்டா விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணை திறப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

ஆகஸ்ட் 28–ம் தேதி முதல்வர் விஜய் மேட்டூர் அணைக்கு நேரில் சென்று தண்ணீர் திறந்து வைக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது. இதையொட்டி சேலம் கமலாபுரம் விமான நிலையம் முதல் மேட்டூர் வரையிலான பயணம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

அணை திறக்கப்பட்டால் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட காவிரி டெல்டா பகுதிகளுக்கு பாசன நீர் கிடைக்கும். இந்த ஆண்டு தாமதமாக அணை திறக்கப்படுவதால், நீர் சம்பா சாகுபடிக்கு முக்கியமாக பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நபிகள் நாயகத்தின் உன்னதமான கொள்கைகள் நமக்கு ஊக்கமளிக்கட்டும்: குடியரசு தலைவர் - பிரதமர் மோடி வாழ்த்து!



புதுடெல்லி, ஆக. 26–

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட செய்தி குறிப்பில், “மிலாடி நபி நன்னாளில், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் மக்கள் அனைவருக்கும், குறிப்பாக இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதில் தீவிரமாக பங்களிக்க, நபிகள் நாயகத்தின் உன்னதமான கொள்கைகள் நமக்கு ஊக்கமளிக்கட்டும்,” என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மிலாடி நபி கொண்டாடும் இஸ்லாமிய மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “மிலாடி நபி நல்வாழ்த்துகள்.

இந்த தினமானது நம்மிடையே ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் மேலும் வளர்க்கட்டும். மேலும், கருணை மற்றும் சமுதாயத்திற்கு திருப்பிக் கொடுக்கும் மனப்பான்மை எப்போதும் நமக்கு வழிகாட்டட்டும்” என்று பதிவிட்டுள்ளார்.

மிலாடி நபி கொண்டாடும் இஸ்லாமிய மக்களுக்கு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி தங்களின் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமியர்களின் புனித பண்டிகையான மிலாடி நபி, நபிகள் நாயகம் முஹம்மதுவின் பிறப்பைக் குறிக்கிறது.


இஸ்லாமியர்களுக்கு நபிகள் நாயகம் முஹம்மது அவர்களின் பிறந்தநாள் ஒரு புனிதமான நாளாக கொண்டாடப்படுகிறது.

அவரது போதனைகள், உலகம் முழுவதும் பலரால் பின்பற்றப்பட்டு, தன்னலமற்ற தன்மையையும் மன்னிக்கும் குணத்தையும் கடைபிடிக்கு மாறு வலியுறுத்திகிறது.

உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்களுக்கு, இந்த நாள் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை, போதனைகள் மற்றும் கருணையை போற்றும் ஒரு சிந்தனை மற்றும் நன்றியுணர்வின் தருணமாக அமைகிறது.

இஸ்லாமிய மக்கள் மிலாடி நபி கொண்டாட்டங்களை காலைத் தொழுகைகள் மற்றும் மசூதிகளில் கூடி கொண்டாடப்படுகின்றனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தமிழ்வழி படித்தோருக்கு அரசுப் பணி!





புதுடெல்லி, ஆக. 26–

தமிழக அரசுப் பணிகளில் நேரடி பணி நியமனம் வழியே நிரப்பப்படும் அனைத்து காலியிடங்களிலும் 20 சதவீதம் இடங்களை தமிழ் வழியில் படித்தோருக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்காக, 2010–ம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ், ஒரு பணிக்கு விண்ணப்பித்தவர் அரசு பணியில் இருக்கிறாரா, இல்லையா என்பதை ஆராயாமல் இதுநாள் வரை தமிழ் வழியில் படித்தவர்களுக்கு, அரசு முன்னுரிமை வழங்கி வந்தது.

இந்த சூழ்நிலையில் சென்னை ஐகோர்ட்டு, ஏற்கனவே அரசுப் பணியில் உள்ளவர்கள் தமிழ் வழியில் பயின்றவர்கள் என்ற வகைப்பாட்டின் கீழ் முன்னுரிமைக்கு தகுதியற்றவர்கள் என தீர்ப்பளித்தது. இதை தெளிவுப்படுத்தவும் கடந்த 2010 செப்டம்பர் 7–ம் தேதிக்கு பின் இதுநாள் வரை தமிழில் படித்தவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில், பணியில் சேர்ந்தது செல்லும் என்பதை உறுதிப்படுத்தவும், புதிதாக சேருவோருக்கு மட்டும், அச்சலுகையை பயன்படுத்தவும், புதிய சட்ட திருத்த மசோதா கடந்த ஜனவரி மாதம் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், தமிழ்வழியில் படித்தோருக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்கும் மசோதாவுக்கு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் ஒப்புதல் அளித்துள்ளார். தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 20% ஒதுக்கீடு வழங்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இனிமேல் புதிதாக நிரப்பப்படும் பணி நியமனங்களுக்கு மட்டுமே இந்த திருத்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்விவரம்:–

* 1–ம் வகுப்பு வகுப்பு முதல் அரசு வேலைக்கான வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரையில் முழுவதுமாக தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் மட்டுமே முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள். இதர மொழிகளைப் பயின்று மொழியாக கொண்டு பயின்று, தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்கள், இம்முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர்கள் அல்லர்.
* 1–ம் வகுப்பில் பள்ளியில் சேராமல், வயதின் அடிப்படையில் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 2 முதல் 8 வரையிலான வகுப்புகளில் நேரடியாக பள்ளிகளில் சேர்ந்து, தமிழ்மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று தேர்ச்சி பெற்றவர்களும், பிற மாநிலங்களில் தமிழ்மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, பின்னர் தமிழ் நாட்டில் தங்களது கல்வியினை, சேரும் வகுப்பிலிருந்து தொடர்ந்து தமிழ் வழியில் பயின்றவர்களும் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் ஆவர்.
* பணிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரை அவர்கள் பயின்ற சம்பந்தப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலிருந்தும் தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களைப் பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஓணம் திருநாள் அனைவரது வாழ்விலும் நலத்தையும், வளத்தையும் வழங்கட்டும்! - முதலமைச்சர் விஜய்!




சென்னை, ஆக. 26–

கேரள மக்கள் அனைவரும் பாகுபாடின்றி, மிகவும் மகிழ்ச்சியோடு எதிர்நோக்கும் ஒரு திருவிழா, ஓணம் பண்டிகை. ஆவணி மாதம் வரும் திருவோண நட்சத்திரமான இன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் மகாபலி சக்கரவர்த்தி, தன் நாட்டிற்கு விஜயம் செய்வதாக நம்பிக்கை. எனவே, அவரை வரவேற்கும் நாளாக ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

ஓணம் திருநாளில் கேரளம் முழுவதும், புத்தாடைகள், பூ கோலங்கள், விளையாட்டுப் போட்டிகள், பலகாரங்கள் என கொண்டாட்டம் களைகட்டும். கேரளம் மட்டுமின்றி தென்தமிழக மாவட்டங்களிலும் ஓணம் பண்டிகை விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

ஓணம் திருநாளையொட்டி முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்து வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

உலகெங்கும் வாழும் மலையாளச் சொந்தங்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த ஓணம் திருநாள் நல்வாழ்த்துகள்!

கேரளம் மாநிலத்தின் அறுவடைத் திருநாளாம் ஓணம் திருநாளில், உங்கள் இல்லத்திலும், உள்ளத்திலும், அன்பும், மகிழ்ச்சியும் என்றும் பொங்கிப் பெருகட்டும்! அழகிய வண்ணப் பூக்கோலம்போல உங்கள் வாழ்க்கை பொலிவு பெறட்டும்!

அன்பைப் பரிமாறி, மகிழ்ச்சியைக் கொண்டாடி, ஒற்றுமையைப் போற்றும் இத்திருநாள் அனைவரது வாழ்விலும் நலத்தையும், வளத்தையும் வழங்கட்டும்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 26.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 09-ம் தேதி

## அமெரிக்காவை விடுங்க... சீனாவில் AI செய்யும் அதிரடி மாற்றம்!




சீனாவின் வேலைவாய்ப்பு சந்தையை செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ரோபோடிக்ஸ் வேகமாக மாற்றி வருகின்றன. தனியார் நிறுவனங்கள் மட்டுமின்றி, அரசின் கொள்கைகளும் AI பயன்பாட்டை ஊக்குவிப்பதால் தொழிற்சாலைகள், நிறுவனங்கள், சேவைத் துறைகள் என பல இடங்களில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் இளம் ஊழியர்கள் முதல் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் வரை வேலை பறிபோகும் அச்சத்தில் உள்ளனர்.

குறிப்பாக கணினி நிரலாக்கப் பணிகளில் AI–யின் பயன்பாடு அதிகரித்துள்ளது. AI உதவியுடன் ஒரு புதிய ஊழியர், முன்பு மிட்–லெவல் ஊழியர் செய்த பணிகளையே செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர்கள் கூறுகின்றனர். கல்வியிலும் AI மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. AI மொழிபெயர்ப்பு கருவிகளால் வெளிநாட்டு மொழிப் படிப்புகளுக்கான ஆர்வம் குறைந்து வருகிறது.

இதற்கிடையே மனித உருவ ரோபோக்கள் தபால் நிலையங்களில் பார்சல் பிரித்தல், போக்குவரத்து கட்டுப்பாடு, காபி தயாரித்தல், உணவு டெலிவரி போன்ற பணிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி மந்தமாகும் சூழலில், AI மற்றும் ரோபோக்கள் வேலைவாய்ப்பை குறைக்குமா என்ற கவலை சீனாவில் தீவிரமடைந்துள்ளது.

## ராஜஸ்தான்: மந்திரிக்கு பன்றிக்காய்ச்சல் உறுதி - தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதி!



ஜெய்ப்பூர், ஆக. 26–

இந்தியாவில் பன்றிக்காய்ச்சல் அதிகரித்து வருகிறது. பன்றிக்காய்ச்சல் என்பது பன்றிகளிலிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய ஒரு வைரஸ் தொற்றாகும். இந்த வைரஸ் தொற்று மனிதர்களுக்கு இடையே வேகமாக பரவும் தன்மை கொண்டது. இதனிடையே, ராஜஸ்தானில் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. அம்மாநில வேளாண் மந்திரியாக கிரோடி லால் மீனா (வயது 74) செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில், மந்திரி கிரோடி லால் மீனாவுக்கு கடந்த சில நாட்களுக்குமுன் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் ஜெய்ப்பூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பரிசோதனை நடத்திய டாக்டர்கள் மந்திரிக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பதை உறுதி செய்தனர். இதையடுத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மந்திரி கிரோடி லால் மீனாவின் உடல்நிலை மோசமடைந்து வரும் நிலையில் அவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பாகிஸ்தான் மருத்துவமனையில் ஏசி வெடித்து பயங்கர தீ: 15 குழந்தைகள் உடல் கருகி பலி!



இஸ்லாமாபாத், ஆக. 26–

இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தான் மருத்துவமனையில் மகளிர் மருத்துவப் பிரிவில், குழந்தைகளுக்கான பராமரிப்பு அறை அமைந்துள்ளது. அங்கு காலை 16 பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை பெற்று வந்தன. அப்போது மருத்துவமனையின் பராமரிப்பு அறையில் இருந்த ஏசி இயந்திரத்தின் கம்ப்ரெசர் திடீரென வெடித்ததாக கூறப்படுகிறது. இதனால் தீப்பிடித்து அறை முழுவதும் புகை சூழ்ந்தது. தீ வேகமாக பரவியதால் அங்கிருந்த குழந்தைகள் சிக்கிக்கொண்டனர்.

தகவல் அறிந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். குழந்தைகள் இருந்த அறை, மருத்துவமனையின் 3–வது மாடியில் இருந்ததால், மீட்பு பணியில் சிக்கல் ஏற்பட்டது. ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து தீயணைப்பு வீரர்கள் உள்ளே சென்று குழந்தைகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 15 குழந்தைகள் உயிரிழந்த நிலையில், ஒரு பச்சிளம் குழந்தை மட்டும் உயிருடன் மீட்கப்பட்டதாக மீட்புப் படையினர் தெரிவித்தனர். தீ முழுமையாக அணைக்கப்பட்டு, தொடர்ந்து குளிர்விக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரிக்கின்றனர்.

## வரலாற்றில் முதன்முறையாக 10 மணிநேரம் தொடர்ந்து நடந்த தமிழக சட்டசபை!




சென்னை, ஆக. 26–

தமிழக சட்டசபை நிகழ்வுகள் கடந்த காலங்களில் பொதுவாக காலையில் தொடங்கி அதிகபட்சமாக பிற்பகல் 3 அல்லது 4 மணி வரை நீடிப்பது உண்டு. இதையே நீண்ட நேரம் நடைபெற்றதாக எம்.எல்.ஏ.க்கள் கூறுவதுண்டு. ஆனால் தற்போது த.வெ.க. ஆட்சியில், சட்டசபையில் கேள்வி நேரம் இல்லாத சூழ்நிலையில், சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் கடந்த சில தினங்களாக புதிய முயற்சியை மேற்கொண்டார்.

அதன்படி, அரசுத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின் போது, வெட்டுத் தீர்மானத்தில் பெயர் கொடுத்திருந்த எம்.எல்.ஏ.க்கள் விவாதித்த பிறகு வேறு எம்.எல்.ஏ.க்களையும் அவர்களின் கோரிக்கைகளை கூற அழைப்பு விடுத்தார். அந்த வகையில் தினமும் 30–க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்கள், அவையில் பேசி, அவர்களது தொகுதியின் மிக முக்கியமான கோரிக்கைகளை கூற வாய்ப்பு கிடைத்தது. அதில் சில கோரிக்கைகளுக்கு பதிலும் கிடைத்தது.

நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த், காலையில் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதிலை, அரசு அதிகாரிகளிடம் இருந்து பெற்று, அவற்றை மாலை நேரத்தில் அறிவிப்புகளாக வெளியிட்டார். இதை சபாநாயகர் வெகுவாக பாராட்டினார். இதுதான் ஒரு அமைச்சரின் பொறுப்புக்கான உதாரணம் என்று குறிப்பிட்டார்.

எம்.எல்.ஏ.க்கள் பலரையும் கேள்விகள் கேட்க அனுமதிப்பதை அடுத்து அவை நடைபெறும் நேரம் கடந்த சில நாட்களாக மாலை 6 மணியை தாண்டிச் சென்றது. அதன் உச்சமாக நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்கிய அவை இரவு 7.13 மணிவரை நீடித்தது. அந்த வகையில் சுமார் 10 மணி நேரம் அவை அலுவல்கள் நேற்று நடைபெற்றன. இதுதான் தமிழக சட்டசபை வரலாற்றில் இடைவெளி விடாமல் தொடர்ந்து அவை அதிகபட்சமாக நடைபெற்ற நேரமாக கருதப்படுகிறது.

## குழந்தை பெற்றால் ரூ.53 லட்சம்! மக்கள் தொகையைப் பெருக்க அரசின் புதிய திட்டம்!!



சிங்கப்பூர், ஆக. 26–

சிங்கப்பூரில் குறைந்து வரும் மக்கள் தொகை எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க பிரதமர் லாரன்ஸ் வாங் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்த நிலையில், இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வரவிருக்கிறது.

சிங்கப்பூர் அரசின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிவிப்பில், சிங்கப்பூரில் அழகான குடும்பங்களை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்த வேறு என்னவெல்லாம் செய்ய முடியும் என்று கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. குழந்தைப்பேறு, கல்வி, அடிப்படை வசதிகள் குறித்த கவலைகளால், இளம் தம்பதிகள் குழந்தைப் பேற்றை தள்ளிப்போடுகிறார்கள்.

மேலும் சிலர் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்கிறார்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தை பெற்றுக் கொள்ள பெரும்பாலானோர் விரும்புவதில்லை. எனவே, ஆகஸ்ட் 23ஆம் தேதி தேசிய நாளை முன்னிட்டு பிரதமர் அளித்த பேட்டியில், நாடு குழந்தைப் பேற்றை அதிகரிக்க விரும்புகிறது என்ற தகவலை வெளியிட்டார்.

2023ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமான குழந்தை பிறந்தால் ரொக்கப் பரிசு வழங்குவது தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது குழந்தை பெற்றுக் கொள்ளும் தம்பதிக்கு ரூ.53 லட்சம் குழந்தை போனஸ் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இது அவர்களது 17 வயது வரை ஆண்டுதோறும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரொக்கப் பரிசு திட்டம் 2023ஆம் ஆண்டு பிப்ரவரி 14ஆம் தேதிக்குப்பிறகு பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும்.

அது மட்டுமல்லாமல், குழந்தைகள் பராமரிப்பு செலவு, கல்விச் செலவுகளையும் குறைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க விசா நேர்காணல்கள் தற்காலிக நிறுத்தம்; 2 லட்சம் பேரின் விசா ரத்து?




வாஷிங்டன், ஆக. 26–

உலகம் முழுவதும் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மற்றும் துணை தூதரகங்களில் விசா நேர்காணல்களை டிரம்ப் நிர்வாகம் தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளது. தூதரக அதிகாரிகளுக்கான புதிய உலகளாவிய பயிற்சி திட்டத்திற்காக நேர்காணல்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பொது நலத்திட்ட உதவிகளை சார்ந்து வாழ வாய்ப்புள்ள விசா விண்ணப்பதாரர்களை துல்லியமாக கண்டறிவதே பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். விசா நடைமுறைகளை கடுமையாக்கும் டிரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கையால், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஐ.டி. ஊழியர்கள் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகம், துணை தூதரகங்களில் விசா நேர்காணலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களுக்கு வேறொரு தேதியில் நேர்காணல் நடைபெறும் என மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும் அமெரிக்காவில் சுற்றுலா மற்றும் வணிக விசாவில் வந்து அடைக்கலம் கோரிய 2 லட்சம் வெளிநாட்டினரின் விசாவை ரத்து செய்ய டிரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. 2016 முதல் 2026 வரை பி1, பி2 விசா பெற்று அடைக்கலம் கோரியவர்களின் விசாக்கள் ரத்து செய்யப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்க வரலாற்றிலேயே மிகப் பெரிய விசா ரத்து நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

அமெரிக்காவில் உயர்தொ ழில்நுட்பப் பணியாளர்களுக்கான புதிய எச்–1பி விசா விண்ணப்பக் கட்டணத்தை ரூ.99 லட்சம்வரை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. உள்நாட்டு அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவும். வெளிநாட்டுப் பணியாளர்களை அமர்த்துவதைக் கட்டுப்படுத்தவும் இக்கட்டண உயர்வை அமல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க உளவு பிரிவு இயக்குநர் ரஷியாவுக்கு ரகசிய பயணம் இதற்காகவா? பரபரப்பு தகவல்!



மாஸ்கோ, ஆக. 26–

அமெரிக்க உளவு பிரிவு இயக்குநர் ஜான் ராட்கிளிப் ரஷியாவுக்கு தனி விமானத்தில் சென்றுள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கும் அமைப்பாக சி.ஐ.ஏ. எனப்படும் மத்திய புலனாய்வு முகமை உள்ளது. இதன் இயக்குநர் ஜான் ராட்கிளிப் எந்த வித அறிவிப்பும் இன்றி தனி விமானத்தில் ரஷியாவுக்கு சென்றுள்ளார்.

இதன்படி, அமெரிக்காவின் மேரிலாந்தில் உள்ள ஆண்ட்ரூஸ் கூட்டு ராணுவ தளத்தில் இருந்து புறப்பட்டு, ரஷியாவின் மாஸ்கோ நகரில் உள்ள நுகோவோ சர்வதேச விமான நிலையத்தில், அமெரிக்காவின் போயிங் சி–17 குளோப்மாஸ்டர் 3 ராணுவ போக்குவரத்து விமானம் நேற்று தரையிறங்கியது. உலக பொருளாதாரத்தில் இருந்து ஈரானை துண்டிக்கும் வகையிலான புதிய பிரசாரத்திற்கான திட்டம் ஒன்றை, அமெரிக்க கஜானா மந்திரி ஸ்காட் பெசன்ட் சமீபத்தில் வெளியிட்டார். ஈரானின் முக்கிய வர்த்தக பங்குதாரராக ரஷியா உள்ளது.

அந்நாட்டுடன் ரஷியா வணிகத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்த சூழலில், இதுபோன்ற நாடுகளை இலக்காக கொண்டு அமெரிக்கா செயல்பட திட்டமிட்டு உள்ளது. ஈரானை தன் வழிக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஒன்றாக இந்த பிரசார திட்டம் செயல்படுத்தப்படும்.

அந்த வகையில், சி.ஐ.ஏ. இயக்குநர் ஜானின் இந்த பயணம் முக்கியத்துவம் பெறுகிறது. அடுத்த சில ஆண்டுகளில் நேட்டோவின் ஒற்றுமையை பரிசோதித்து பார்க்கும் வகையில், அதன் உறுப்பு நாடுகள் ஒன்றின் மீது சிறிய அளவில் தாக்குதல் நடத்த ரஷிய அதிபர் புதின் திட்டமிட்டு உள்ளார்.

இந்த ரகசிய தகவலை அமெரிக்க உளவு அமைப்பு கண்டறிந்துள்ளது. இதன்படி, அந்த தாக்குதல்கள் சைபர் தாக்குதல் முதல் சிறிய ராணுவ தாக்குதல் வரை இருக்க கூடும் என கூறப்படுகிறது. இதனை முன்னிட்டும், ஜானின் இந்த பயணம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த பயணத்தில் ரஷியாவின் முக்கிய அதிகாரிகளை ஜான் நேரில் சந்தித்து பேச இருக்கிறார்.

## ஆவணி அவிட்டத்தை முன்னிட்டு பத்திரப் பதிவுக்கு கூடுதல் முன்பதிவு டோக்கன்கள்!


சென்னை, ஆக. 26–

தமிழக அரசின் பத்திரப்பதிவுத்துறை தலைவரால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:– சுபமுகூர்த்த மற்றும் விசேஷ தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது ஆவணி மாதத்தில் வரும் ஆவணி அவிட்டம் மற்றும் பவுர்ணமி தினமான 27–ந் தேதி (நாளை) அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு சார்பதிவாளர் அலுவலகங்கள்: வழக்கமாக வழங்கப்படும் 100 டோக்கன்களுக்கு பதிலாக 150 முன்பதிவு டோக்கன்கள் வழங்கப்படும்.

இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்கள்: வழக்கமான 200 டோக்கன்களுக்கு பதிலாக 300 முன்பதிவு டோக்கன்கள் வழங்கப்படும்.

அதிக பதிவு நடைபெறும் 100 அலுவலகங்கள்: 100 சாதாரண முன்பதிவு டோக்கன்களுக்கு பதிலாக 150 சாதாரண டோக்கன்கள் வழங்கப்படும். ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் டோக்கன்களுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு டோக்கன்கள் சேர்க்கப்பட்டு மொத்தம் 16 தட்கல் டோக்கன்கள் வழங்கப்படும்.



## பணத்தட்டுப்பாட்டை விரட்டும் வாஸ்து!



வீட்டில் வாஸ்து சரியாக இருப்பது, வீட்டில் நேர்மறையான சூழலை உருவாக்க உதவும் என்று நம்பப்படுகிறது. குறிப்பாக, கடினமாக சம்பாதிக்கும் பணத்தை சேமிக்கவும், தக்க வைத்துக்கொள்ளவும், பெருக்கவும் சில வாஸ்து முறைகளைப் பின்பற்றலாம்.

**1. பிரதான வாசலை சுத்தமாக வைத்திருங்கள்**

வீட்டின் பிரதான வாசல் வழியாக நேர்மறை ஆற்றல் வீட்டிற்குள் வரும் என்று வாஸ்து நம்பிக்கையில் கூறப்படுகிறது. எனவே வாசல் பகுதியை எப்போதும் சுத்தமாகவும், வெளிச்சமாகவும் வைத்திருக்க வேண்டும். உடைந்த பொருட்கள், தேவையற்ற பொருட்கள், குப்பைகள் போன்றவற்றை வாசல் அருகில் வைக்கக்கூடாது. அழுக்காகவும் இருட்டாகவும் இருக்கும் வாசல் எதிர்மறை சூழலை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

**2. உடைந்த மற்றும் பயன்படுத்தாத பொருட்களை அகற்றுங்கள்**

வீட்டில் நீண்ட காலமாக உடைந்த நிலையில் இருக்கும் பொருட்கள், உடைந்த பாத்திரங்கள், ஓடாத கடிகாரங்கள், பழுதான மின்னணு சாதனங்கள், உடைந்த கண்ணாடிகள் உள்ளிட்ட பயன்பாடற்ற பொருட்களை சேர்த்து வைக்க வேண்டாம். அவற்றை அவ்வப்போது அகற்றுவது வீட்டை சுத்தமாக வைத்திருப்பதுடன், மன அமைதிக்கும் உதவும் என்று கூறப்படுகிறது.

**3. கல் உப்பை பயன்படுத்தலாம்**

கல் உப்பு எதிர்மறை ஆற்றலை உறிஞ்சும் தன்மை கொண்டதாக வாஸ்துவில் கருதப்படுகிறது. வாரத்திற்கு ஒருமுறை வீட்டைத் துடைக்கும் தண்ணீரில் சிறிதளவு கல் உப்பைக் கலந்து பயன்படுத்தலாம். குறிப்பாக வீட்டின் மூலைப் பகுதிகளையும் நன்றாக சுத்தம் செய்வது நல்லது என்று கூறப்படுகிறது.

**4. வடக்கு திசையை சுத்தமாக வைத்திருங்கள்**

வடக்கு திசை குபேரனின் திசையாக கருதப்படுகிறது. எனவே இந்தப் பகுதியை எப்போதும் சுத்தமாகவும், திறந்த நிலையிலும் வைத்திருப்பது முக்கியம். கனமான பொருட்கள், தேவையற்ற சேமிப்புப் பொருட்கள் போன்றவற்றை வடக்கில் வைப்பதைத் தவிர்க்கலாம். இதனால் செல்வ வளம் அதிகரிக்கும் என்பது வாஸ்து நம்பிக்கை.

**5. மாலை நேரத்தில் விளக்கேற்றுங்கள்**

மாலை நேரத்தில் வீட்டில் விளக்கேற்றி வழிபடுவது பாரம்பரியமாகப் பின்பற்றப்படும் ஒரு வழக்கம். இது வீட்டில் நேர்மறையான சூழலை உருவாக்குவதோடு, லட்சுமி தேவியின் அருளையும் பெற உதவும் என்று நம்பப்படுகிறது. விளக்கின் ஒளி மனதிற்கு அமைதியையும், வீட்டிற்கு மங்களகரமான சூழலையும் தரும்.

**6. மாதந்தோறும் பட்ஜெட் போடுங்கள்**

வாஸ்து பரிகாரங்களுடன் பண மேலாண்மையிலும் கவனம் செலுத்த வேண்டும். அதிக வருமானம் இருந்தாலும் தேவையற்ற செலவுகள் அதிகமாக இருந்தால் பணத்தை சேமிக்க முடியாது. எனவே ஒவ்வொரு மாதமும் வருமானம், வழக்கமான செலவுகள், அவசர செலவுகள் ஆகியவற்றை கணக்கிட்டு பட்ஜெட் தயாரிக்க வேண்டும். அதற்கேற்ப செலவு செய்தால் சேமிப்பை அதிகரிக்க முடியும்.

**7. வீட்டை தொடர்ந்து பராமரியுங்கள்**

ஒருமுறை மட்டும் வீட்டை சுத்தம் செய்துவிட்டு விட்டுவிடாமல், தொடர்ந்து பராமரிப்பது அவசியம். பிரதான வாசல், வடக்கு திசை, பயன்படுத்தாத மற்றும் தேவையற்ற பொருட்கள் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். இதனால் வீடு சுத்தமாகவும் அழகாகவும் இருப்பதுடன், நேர்மறையான சூழலும் உருவாகும். இதன் மூலம் மன அமைதியும் நிம்மதியும் கிடைக்கும் என்று வாஸ்து நம்பிக்கைகள் கூறுகின்றன.

## தமிழ்நாட்டில் வேகமாக பரவும் பன்றிக்காய்ச்சல்!




சென்னை, ஆக. 26–

தமிழ்நாட்டிலும் பன்றிக்காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. அதன்படி, ஜனவரி மாதம் தமிழகத்தில் 19 பேருக்கு பன்றிக்காய்ச்சல் பாதிப்பு இருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 339 ஆக அதிகரித்துள்ளது. அதேவேளை, பன்றிக்காய்ச்சல் அறிகுறிகளான திடீர் உயர் காய்ச்சல், இருமல்,

தொண்டை வலி, உடல் வலி , தசை வலி , மூட்டு வலி, தலைவலி, கடுமையான சோர்வு , குளிர் நடுக்கம், மூச்சுத் திணறல், சுவாசிப்பதில் சிரமம் , நெஞ்சு வலி போன்ற உடல்நலக்குறைவு ஏற்பட்டால் பொதுமக்கள் உடனடியாக மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்யுமாறு சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# உணவு சாப்பிட்டவுடன் என்னவெல்லாம் செய்யக்கூடாது!



பொதுவாக உணவு அருந்திய உடனேயே பலரும் பல வேலைகளை வேகமாக செய்கிறார்கள். ஆனால் அது தவறு. உணவருந்திய பின் நாம் என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பதை பற்றி இந்த கட்டுரையில் பார்ப்போம்;

**குளித்தல்:** சாப்பிட்ட உடனே குளித்தால் ரத்த ஓட்டம் தோலின் பகுதிக்கு சென்று வயிற்றுக்கான ரத்த ஓட்டம் குறைந்து செரிமானம் தாமதமாகும்.

**உடனே படுப்பது:** சாப்பிட்டுவுடன் படுப்பது நெஞ்சு எரிச்சல் மற்றும் அஜீரணத்தை ஏற்படுத்தும். குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் கழித்து படுக்க வேண்டும். இரவு உணவுக்கும் தூங்க செல்வதற்கும் இடையே 2 மணி நேரம் இருப்பது மிகவும் நல்லது. அதுவும் தூக்கத்திற்கு முன் சிறிது நேரம் நடந்து விட்டு படுப்பது இன்னும் நல்லது..

**அதிக தண்ணீர் குடித்தல்:** உணவருந்தியதும் உடனே அதிகமாக தண்ணீர் கொடுத்தால் செரிமான நீரில் நீர்த்துப் போய் செரிமானம் மந்தமாகும்.

**டீ அல்லது காபி குடித்தல்:** உணவுக்கு பின் தேநீர் அல்லது காபி குடிப்பது உணவில் உள்ள சத்துக்கள் உறிஞ்சப்படுவதை தடுத்து அமிலத்தன்மையை உருவாக்கும். இதனாலும் செரிமானம் பாதிக்கப்படும்.

**பழங்கள் சாப்பிடுதல்:** உடனடியாக பழங்கள் சாப்பிடுவது வாயு தொல்லை அல்லது செரிமான கோளாறை உண்டாக்கும்

## சினிமா துளிகள்..!

# தனுஷ் கட்சிக்கு 5 பெயர்கள் பரிசீலனை!





நடிகர் தனுஷ் தீவிர அரசியலுக்கு வரத் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ரசிகர் மன்றங்களை சமூகநலப் பணிகளில் ஈடுபடுத்தி, எதிர்காலத்தில் அரசியல் அமைப்பாக மாற்றும் திட்டம் இருப்பதாக கூறப்படுகிறது.

புதிய கட்சிக்காக சுமார் 5 பெயர்கள் பரிசீலனையில் உள்ளதாகவும், இறுதி செய்யப்படும் பெயரை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வழக்கறிஞர்கள் குழு டெல்லி சென்றுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், 2031 சட்டசபை தேர்தலில் தனுஷ் களமிறங்கலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஆனால், இதுவரை தனுஷ் தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்போ, மறுப்போ வெளியாகவில்லை. எனவே, தற்போதைய தகவல்கள் ஊகங்களாகவே உள்ளன.

# யஷின் 'டாக்சிக்' ரசிகர்கள் மிரண்டார்களா?



'கேஜிஎஃப் 2' படத்திற்குப் பிறகு 4 ஆண்டுகள் கழித்து யஷ் நடித்துள்ள 'டாக்சிக்: எ ஃபேரி டேல் ஃபார் க்ரோன்–அப்ஸ்' திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. கீது மோகன்தாஸ் இயக்கியுள்ள இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் கலவையான எதிர்பார்ப்பு இருந்த நிலையில், முதல் விமர்சனங்கள் கவனம் ஈர்த்துள்ளன. யஷின் திரை ஆளுமை, டார்க் டோன், ஹை–ஆக்டேன் சண்டைக் காட்சிகள் மற்றும் பிரம்மாண்டமான காட்சியமைப்புரசிகர்களால் வெகுவாக பாராட்டப்பட்டுள்ளன. இப்படம் திரையரங்கில் பார்க்க வேண்டிய "காட்சி மற்றும் ஒலியின் பிரம்மாண்ட அனுபவம்" என சில ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். முதல் பாதி தீவிரமான உறவுச் சிக்கல்களுடன் நகர்வதாகவும், இரண்டாம் பாதி வழக்கமான கமர்ஷியல் படமாக இல்லாமல் உளவியல் த்ரில்லர் பாணியில் செல்கிறது என்றும் ரசிகர்கள் கூறுகின்றனர். குறிப்பாக கிளைமாக்ஸ் திருப்பம் உணர்ச்சிகரமாக இருப்பதாக விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. இப்படத்தில் கியாரா அத்வானி, நயன்தாரா, ருக்மணி வசந்த் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். மேலும், படத்திற்கு 'A' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் அமைச்சர் ரமேஷ் திடீர் ஆய்வு!



திருவண்ணாமலை, ஆக. 26–

பஞ்சபூத ஸ்தலங்களில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் அக்னி ஸ்தலமாக உள்ளது. இந்த கோவிலுக்கு தினமும் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து திரளான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்கள் மற்றும் பிரதோஷம் உள்ளிட்ட விசேஷ நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகளவில் காணப்படும்.

கோவிலில் பக்தர்கள் ராஜகோபுரம் வழியாகவும், அம்மணி அம்மன் கோபுரம் அருகில் அமைக்கப்பட்டு உள்ள காத்திருப்பு கூடத்தின் வழியாகவும் தரிசனத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். பொது தரிசன வழியில் சாமி தரிசனம் செய்ய சுமார் 3 முதல் 5 மணி நேரம் வரை ஆகும் என பக்தர்கள் மேலானதாக தெரிவிக்கின்றனர். பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் தண்ணீர், பிஸ்கட், மோர் வழங்கப்படுகிறது. இந்த நிலையில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது விஐபிக்கள் தொடர்ந்து தரிசனம் செய்வதால் சாமியை பார்க்க நீண்ட நேரம் ஆவதாக பொதுமக்கள் அமைச்சரிடம் முறையிட்டனர். "முதன்முறையாக ஆய்வுக்கு வந்துள்ளேன். அனைத்தையும் சரிபார்த்து, உரிய நடவடிக்கை மேற்கொள்வேன்" என்று அமைச்சர் ரமேஷ் உறுதி அளித்தார்.

# தமிழகத்தில் பெண்கள் கட்டணமின்றி எத்தனை பஸ்களில் பயணிக்கலாம்?



சென்னை, ஆக. 26–

தற்போது புதிதாக விரிவுபடுத்தப்பட்டுள்ள 'வெற்றி பயணம்' திட்டத்தின் கீழ் எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ் பஸ்கள் என கூடுதலாக 2 ஆயிரத்து 302 பஸ்களில் வருகிற அக்டோபர் 2–ந்தேதி முதல் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்க உள்ளனர். இது தவிர, மாவட்டங்களுக்கு இடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக 2 ஆயிரத்து 47 சாதாரண கட்டண புறநகர் பஸ்களிலும், 275 சாதாரண கட்டண மலைப்பகுதி பஸ்களிலும் வருகிற அக்டோபர் 2–ந்தேதி முதல் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்கலாம். அதன்படி, தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 334 பஸ்களில் வெற்றி பயண திட்டத்தின் மூலம் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்கலாம். மொத்தமாக புதிய வெற்றி பயணம் திட்டத்தின்படி, ஏற்கனவே பயணித்த பஸ்களைவிட கூடுதலாக 4 ஆயிரத்து 624 பஸ்கள் பெண்களின் கட்டணமில்லா பயணத்திற்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் தினசரி ஒரு கோடியே 15 லட்சத்துக்கும் அதிகமான பெண்கள் தினசரி பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆட்டோக்களுக்கு புதிய கட்டணம்!



சென்னை, ஆக. 26–

தமிழகத்தில் ஓடும் 3.46 லட்சம் ஆட்டோக்களுக்கான புதிய கட்டணத்தை இறுதி செய்யும் நோக்கில், சென்னையில் நாளை இரண்டாவது முறையாக முத்தரப்பு பேச்சு வார்த்தை கூட்டம் நடைபெற உள்ளது.

தமிழகத்தில் இயக்கப்படும் 3.46 லட்சம் ஆட்டோக்களுக்கு புதிய கட்டணம் நிர்ணயிப்பது தொடர்பாக, சென்னையில் கடந்த ஜூலை 9–ம் தேதி முத்தரப்பு பேச்சு வார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தையில் 30–க்கும் மேற்பட்ட தொழிற்சங்க நிர்வாகிகளும், பயணியர் அமைப்புகளில் இருந்து 90 பேரும் பங்கேற்றனர். தொழிற்சங்கங்கள் தரப்பில் குறைந்தபட்ச கட்டணத்தை, 70 ரூபாயாக உயர்த்த வலியுறுத்தினர். பயணியர் அமைப்புகளின் நிர்வாகிகள் தரப்பில், குறைந்தபட்ச கட்டணம் 50 ரூபாயாக நிர்ணயம் செய்ய வலியுறுத்தினர். இதையடுத்து, புதிய கட்டணம் தொடர்பான இறுதி அறிக்கையை அரசு தயாரித்துள்ளது. இதனை இறுதி செய்து, புதிய கட்டணத்தை அறிவிப்பதற்காக சென்னையில் நாளை இரண்டாவது முறையாக முத்தரப்பு கூட்டம் நடைபெற உள்ளது.

# கைவிரல் ரேகை பதிவு: தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் 29-ந் தேதி சிறப்பு முகாம்!




சென்னை, ஆக. 26–

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா ரேஷன் அட்டைகளின் ஆதார் விவரங்களை சரிபார்ப்பதற்காக மின்னணு ரேஷன் அட்டையில் இணைக்கப்பட்ட அனைத்து பயனாளிகளின் கை ரேகை அடிப்படையிலான சரிபார்ப்பினை மேற்கொள்ள வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறுமின்றி இப்பணியினை செய்திட அறிவுறுத்தப்பட்டு கடந்த 2023–ம் ஆண்டு அக்டோபர் முதல் குடும்ப உறுப்பினர்களின் கைவிரல் ரேகை சரிபார்ப்பு பணி நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலவரப்படி முன்னுரிமை ரேஷன் அட்டைகளில் 96.21 சதவீதம் கைவிரல் ரேகை சரிபார்ப்பு பணியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கைவிரல் ரேகை பதிவினை 100 சதவீதம் நிறைவு செய்யும்பொருட்டு வருகிற 29–ந் தேதி (சனிக்கிழமை) அன்று தமிழகத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் சிறப்பு முகாம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

எனவே, இதுவரை, ரேஷன் கடைகள் மூலம் கைவிரல் ரேகைப்பதிவு செய்யப்படாமல் விடுபட்டுள்ள ரேஷன் அட்டைதாரர்கள் 29–ந் தேதி மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் நடைபெறும் சிறப்பு முகாமினை பயன்படுத்தி தங்களது கைவிரல் ரேகைப் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல், பருத்தி பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிக்கு தடை?



சென்னை, ஆக. 26–

கார்போசல்ஃபான் பூச்சிக்கொல்லியை இந்தியாவில் இறக்குமதி, உற்பத்தி, விற்பனை, விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகிய அனைத்திற்கும் முழுத் தடை விதிக்க மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

மனிதர்களின் உடல்நலம், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆய்வு செய்த நிபுணர் குழுவும் தடைக்கு பரிந்துரை செய்துள்ளது.

தற்போது இது நெல், பருத்தி மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் பயன்படுத்தப்படுகிறது. இறுதி உத்தரவு வெளியான பிறகே தடை நடைமுறைக்கு வரும்.

# சிஎஸ்கே அணியை வாங்க முயன்றாரா தோனி?



சிஎஸ்கே அணியின் 25% பங்குகளை வாங்க எம்.எஸ். தோனி முயன்றதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அணி நிர்வாகம் 5%க்கு மேல் பங்குகளை வழங்க முடியாது என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதனால் தோனிக்கும் சிஎஸ்கே நிர்வாகத்துக்கும் இடையே பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வீரராக மட்டுமின்றி, அணியின் நிர்வாகத்திலும் முக்கிய பங்கு வகிக்க தோனி விரும்பியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து தோனிசிஎஸ்கே இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதா? என்ற விவாதம் ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆனால், இந்த தகவல்களுக்கு அதிகாரப்பூர்வ உறுதிப்படுத்தல் வெளியாகவில்லை.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் 4,029 காலிப்பணியிடங்கள்!

ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB) சார்பில் ஜூனியர் இன்ஜினியர் (JE), டிப்போ மெட்டீரியல் சூப்பிரண்டெண்ட் உள்ளிட்ட பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நிறுவனம்: ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம்
பணியிடங்கள்: 4,029
வேலை வகை: மத்திய அரசு வேலை
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப முறை: ஆன்லைன்–https://www.rrbapply.gov.in/
அறிவிப்பு எண்: 04/2026
விண்ணப்பம் தொடக்கம்: 14.08.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 13.09.2026

## சென்னையில் 1,010 ரயில்வே பயிற்சி பணியிடங்கள்!

Integral Coach Factory (ICF), சென்னை சார்பில் Act Apprentice பயிற்சிக்கான 1,010 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிறுவனம்: Integral Coach Factory, சென்னை
பணியிடங்கள்: 1,010 Act Apprentice
வேலை வகை: மத்திய அரசு அப்ரண்டிஸ் பயிற்சி
பயிற்சி காலம்: 1 ஆண்டு
பணியிடம்: சென்னை
விண்ணப்ப முறை: ஆன்லைன் – https://pb.icf.gov.in/act2026/
விண்ணப்பம் தொடக்கம்: 08.08.2026 காலை 9.30 மணி
கடைசி நாள்: 07.09.2026 மாலை 5.30 மணி
அறிவிப்பு எண்: PB/RR/39/App/2026
அறிவிப்பு தேதி: 08.08.2026

## கடலூரில் சுகாதாரத் துறையில் 54 பணியிடங்கள்!

கடலூர் மாவட்ட சுகாதார சங்கம் (DHS) சார்பில் பல்வேறு மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு 54 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிறுவனம்: கடலூர் மாவட்ட சுகாதார சங்கம்
காலியிடங்கள்: 54
வேலை வகை: தமிழ்நாடு அரசு ஒப்பந்த பணி
பணியிடம்: கடலூர்
விண்ணப்ப முறை: ஆஃப்லைன் – https://cuddalore.nic.in/
முக்கிய பணியிடங்கள்

Medical Officer, ANM, Pharmacist, Laboratory Technician, ICTC Counselor, Health Inspector Gr–II, Mid Level Health Provider, Dental Surgeon உள்ளிட்ட பல்வேறு பணிகள்.

விண்ணப்பம் தொடக்கம்: 22.08.2026
கடைசி நாள்: 09.09.2026 மாலை 5.00 மணி

## தூத்துக்குடியில் சுகாதாரத் துறையில் 11 பணியிடங்கள்!

நிறுவனம்: மாவட்ட சுகாதார சங்கம், தூத்துக்குடி
காலியிடங்கள்: 11
வேலை வகை: தமிழ்நாடு அரசு ஒப்பந்த பணி
பணியிடம்: தூத்துக்குடி
விண்ணப்ப முறை: ஆஃப்லைன் –https://thoothukudi.nic.in/
முக்கிய பணியிடங்கள்

Occupational Therapist, Audiometric Assistant, Quality Manager, Medical Officer, MLHP, Dental Assistant, RM–NCH Counsellor, Data Entry Operator, Microbiologist, MMU Van Driver உள்ளிட்ட பணிகள்.

விண்ணப்பம் தொடக்கம்: 14.08.2026
கடைசி நாள்: 28.08.2026

## திருச்சி BHEL–ல் 530 அப்ரண்டிஸ் பணியிடங்கள்!

Bharat Heavy Electricals Limited (BHEL), திருச்சி சார்பில் Trade Apprentice, Technician (Diploma) Apprentice, Graduate Apprentice பணிகளுக்கு 530 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிறுவனம்: BHEL, திருச்சி
காலியிடங்கள்: 530
வேலை வகை: அப்ரண்டிஸ் பயிற்சி
பயிற்சி காலம்: 1 ஆண்டு
பணியிடம்: திருச்சி
விண்ணப்ப முறை: ஆன்லைன்– https://trichy.bhel.com/
பணியிடங்கள்
Trade Apprentice
Technician (Diploma) Apprentice
Graduate Apprentice
முக்கிய தேதிகள்
விண்ணப்பம் தொடக்கம்: 14.08.2026 பிற்பகல் 3.00 மணி
கடைசி நாள்: 12.09.2026 இரவு 11.45 மணி

## BEML–ல் 1,346 அப்ரண்டிஸ் பணியிடங்கள்!

BEML Limited சார்பில் பல்வேறு பிரிவுகளில் 1,346 அப்ரண்டிஸ் பயிற்சி பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிறுவனம்: BEML Limited
காலியிடங்கள்: 1,346
வேலை வகை: மத்திய அரசு அப்ரண்டிஸ் பயிற்சி
பயிற்சி காலம்: 1 ஆண்டு
பணியிடம்: பெங்களூரு
விண்ணப்ப முறை: ஆன்லைன் : https://recruitment.bemlindia.in/
பணியிடங்கள்
Engineering Graduate (Technical) Apprentice
Degree Graduate (General) Apprentice
Diploma Apprentice
ITI Apprentice
விண்ணப்பம் தொடக்கம்: 18.08.2026
கடைசி நாள்: 08.09.2026
அறிவிப்பு எண்: L&D/01/2026

## இன்றைய கார்ட்டூன்




# குழந்தைகள், முதியவர்களுக்கு எச்1என்1 வைரஸ் பரவும் அபாயம் அதிகம்!



புதுடெல்லி, ஆக. 26–

தில்லியில் 2,300–க்கும் மேற்பட்ட காய்ச்சல் பதிவாகியுள்ளது. வெள்ளிக்கிழமை வரை 1,777 க்கும் மேற்பட்ட எச்1என்1 பாதிப்புகள் உள்பட வியாழக்கிழமை மட்டும் 114 எச்1என்1 பாதிப்பு பதிவாகியுள்ளதாக சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 'எச்1என்1 பாதிப்பு அதிகரிப்பு தடுப்பு தடுப்பூசி பயன்பாட்டை மீண்டும் கொண்டு வந்துள்ளது' என்று மேடாந்தா மருத்துவமனையின் மூத்த இயக்குநர் டாக்டர் பாரத் கோபால் தெரிவித்துள்ளார்.

பருவகால காய்ச்சல் தடுப்பூசி, குறிப்பாக அதிக ஆபத்துள்ள நபர்கள் மற்றும் குழந்தைகள் அல்லது வயதான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள் குறித்து அதிகமான மக்கள் விசாரித்து வருகின்றனர் என்றார் அவர்.

சர் கங்கா ராம் மருத்துவமனையின் மருத்துவர் டாக்டர் பிபு ஆனந்த் கூறியதாவது: பன்றிக் காய்ச்சல் சோதனை கிட்டத்தட்ட அனைத்து மருத்துவமனைகள் மற்றும் நோயறிதல் மையங்களில் எளிதில் கிடைக்கிறது. தனியார் மருத்துவமனைகளில் சோதனை பொதுவாக ரூ 1,500 முதல் ரூ 5,000 வரை செலவாகும்.

அதே நேரத்தில் ஒரு முழு சுவாச பயோஃபயர் பேனல் ரூ 9,000 முதல் ரூ 15,000 வரை செலவாகும். அரசு மருத்துவமனைகளில், செலவு 'கிட்டத்தட்ட மிகக் குறைவு. மல்டிபிளெக்ஸ் பி. சி. ஆர் சோதனையை தடைசெய்யப்பட்ட ஆய்வகங்களில் மட்டுமே செய்ய முடியும் என்றும், நோயாளியின் அறிகுறிகள், மருத்துவ விளக்கக்காட்சி மற்றும் சிகிச்சையளிக்கும் மருத்துவரின் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் சோதனை செய்வதற்கான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

குருகிராம் பராஸ் ஹெல்த், தொற்று நோய் ஆலோசகர் டாக்டர் ஆகாஷ்னீல் பட்டாச்சார்யா கூறியதாவது: கடந்த வாரத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை ஐந்து முதல் ஆறு வரை அதிகரித்துள்ளது, இது 22–25 சதவீதம் உயர்வாக இருக்கிறது.

காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் தினமும் எட்டு முதல் 10 நோயாளிகள் மருத்துவமனைக்கு வருகிறார்கள், அதே நேரத்தில் கடுமையான காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு முதல் மூன்று நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காய்ச்சல், இருமல், தொண்டை புண், தலைவலி, உடல் வலி, குளிர், சோர்வு, மூக்கு ஒழுகுதல் மற்றும் மூக்கு அடைப்பு ஆகியவை பொதுவான அறிகுறிகளாகும். சில நோயாளிகள், குறிப்பாக குழந்தைகள், குமட்டல், வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு ஆகியவற்றை அனுபவிக்கலாம்.

சிக்கலற்ற இன்ஃப்ளுயன்ஸா உள்ள பெரும்பாலான நோயாளிகளுக்கு வெளிநோயாளர் அடிப்படையில் சிகிச்சையளிக்க முடியும் என்றும் அவர்களுக்கு மருத்துவமனையில் அனுமதி தேவையில்லை என்றார் அவர்.

நோயாளிகள் நிமோனியா, சுவாசக் கோளாறுகள், குறைந்த ஆக்ஸிஜன் செறிவு, தொடர்ச்சியான அதிக காய்ச்சல் அல்லது ஏற்கனவே உள்ள மருத்துவ நிலை மோசமடைவது ஆகியவற்றை உருவாக்கும் போது சேர்க்கை பொதுவாக கருதப்படுகிறது.

நாங்கள் இரண்டு வடிவங்களையும் பார்க்கிறோம். எச்1என்1 பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ளதால் பல நோயாளிகள் ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனையை நாடுகிறார்கள், சிலர் தொடர்ந்து ஆலோசனையை தாமதப்படுத்தி, அறிகுறிகள் தொடர்ந்து அல்லது கடுமையானதாக இருக்கும்போது மட்டுமே வருகிறார்கள் என்று டாக்டர் கோபால் கூறினார்.

அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கு இன்ஃப்ளுயன்ஸா நிமோனியா மற்றும் பிற சுவாச சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்பதால், சுய மருந்துகளுக்கு எதிராக, குறிப்பாக மருத்துவ ஆலோசனை இல்லாமல் நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன், தாமதத்திற்கு எதிராக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

கடுமையான மூச்சுத் திணறல், தொடர்ச்சியான மார்பு வலி, 94 சதவீதத்திற்கும் குறைவான ஆக்ஸிஜன் செறிவு, குழப்பம், நீல நிற உதடுகள் அல்லது விரல் நுனிகள் அல்லது ஆரம்பத்தில் குணமடைந்த பிறகு மீண்டும் வரும் காய்ச்சல் ஆகியவற்றை மக்கள் உணர்ந்தால் மருத்துவ உதவியை நாட வேண்டும் என்று அவர்கள் கூறினர். கை மற்றும் சுவாச சுகாதாரத்தை பராமரிக்கவும், நெரிசலான இடங்களில் முகக்கவசம் அணியவும், பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பைத் தவிர்க்கவும், வீட்டிலேயே இருக்கவும் அல்லது உடல்நிலை சரியில்லாதபோது தனிமைப்படுத்தவும் மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

# தி.மு.க.வில் 110 புதிய மாவட்டங்கள் பட்டியல்- விரைவில் வெளியிட திட்டம்!



சென்னை, ஆக. 26–

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. தோல்வி அடைந்தது. இதையடுத்து தேர்தல் தோல்விக்கான காரணத்தை ஆராய உண்மை கண்டறியும் குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவினர் ஆய்வு செய்து அளித்த அறிக்கையின் அடிப்படையில் சமீபத்தில் தி.மு.க. செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்தது.

இந்த கூட்டத்தில் 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் 'தி.மு.க. மாவட்டங்களின் எண்ணிக்கை 110 ஆக அதிகரிக்கப்படும்' என்ற தீர்மானமும் அடங்கும். அதன் தொடர்ச்சியாக தி.மு.க. கட்சி தலைமை 110 மாவட்டங்கள் அடங்கிய பட்டியலை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது.

தற்போது 110 புதிய மாவட்டங்கள் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இந்த பட்டியலை கட்சி தலைமை விரைவில் வெளியிட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து தி.மு.க. நிர்வாகிகள் சிலர் கூறியதாவது:–

தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் 110 மாவட்டங்கள் குறித்த பட்டியல் தயாரித்து முடிக்கப்பட்டுவிட்டது. அந்த மாவட்டங்களுக்கு உட்கட்சி தேர்தல் அடிப்படையில் புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுவார்கள். இதற்கு வசதியாக முதற்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பொறுப்பாளர் வீதம் புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படி பொறுப்பாளர்கள் நியமனம் நடந்தால், அவர்கள் அடுத்து வரும் உட்கட்சி தேர்தலில் மீண்டும் வெற்றி பெறுவதற்கான பணிகளை முடுக்கி விடுவார்கள். அப்போது உட்கட்சி தேர்தல் ஜனநாயக ரீதியிலும், நியாயமான முறையிலும் நடப்பதில் சிக்கல் ஏற்படும் என்று கட்சி தலைமைக்கு மூத்த நிர்வாகிகள் ஆலோசனை தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தற்போது பொறுப்பாளர்கள் பட்டியலை அறிவிக்கும் முடிவை தள்ளி வைத்துள்ளார். இதனாலேயே பொறுப்பாளர்கள் அறிவிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவில் 110 மாவட்டங்கள் குறித்த அதிகாரப்பூர்வ பட்டியலை தி.மு.க. தலைமை வெளியிடும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.



மதுரை மாவட்டம், கோரிப்பாளையம் சந்திப்பில் இருபுறமும் பேருந்து நிறுத்தம் மற்றும் நிழற்குடை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்வது தொடர்பாக மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சு.வெங்கடேசன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டனர். மாநகராட்சி மேயர் (பொ)– துணை மேயர் நாகராஜன் உடன் உள்ளார்.

# வளைகுடா சப்ளை பாதிப்பு: அமெரிக்காவை நாடிய இந்தியா!




வாஷிங்டன், ஆக. 26–

வளைகுடா நாடுகளில் இருந்து எரிவாயு சப்ளை பாதிக்கப்பட்டதால், இந்தியா LPG, LNG இறக்குமதியை அமெரிக்காவிடம் அதிகரித்துள்ளது. ஜூலை மாதத்தில் இந்தியாவின் LPG இறக்குமதியில் 73% அமெரிக்காவிலிருந்து வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அதேசமயம், UAE மற்றும் கத்தாரிலிருந்து வரும் சப்ளை கணிசமாக குறைந்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வை தவிர்க்க, இந்தியா தனது LNG சப்ளையர் நாடுகளின் எண்ணிக்கையை 6–ல் இருந்து 15 ஆகவும், கச்சா எண்ணெய் சப்ளையர்களை 27–ல் இருந்து 41 ஆகவும் உயர்த்தியுள்ளது. ரஷ்யாஉக்ரைன் போர் மற்றும் மத்திய கிழக்கு பதற்றம் காரணமாக மாற்று சப்ளை வழிகளை இந்தியா தீவிரமாக தேடி வருகிறது.

# இந்தா வாங்கிக்கோ!அமெரிக்காவுக்கு கனடாவின் பதிலடி!



அமெரிக்கா, ஆக. 26–

அமெரிக்கா கனடா பொருட்களுக்கு 50% வரை வரி விதித்ததைத் தொடர்ந்து, 24 மணி நேரத்துக்குள் கனடாவும் பதிலடி வரியை அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சுமார் 700 பொருட்களுக்கு 15%, 25%, 50% வரை வரிவிதிக்கப்பட்டுள்ளது. ஸ்டீல், அலுமினியம், பர்னிச்சர், ஆடைகளுக்கு 50% வரியும், சீஸ், வீட்டு உபயோகப் பொருட்கள், கடல் உணவுகளுக்கு 25% வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வரிகள் மூலம் பாதிக்கப்படும் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் நிறுவனங்களுக்கு 7.5 பில்லியன் கனடா டாலர் நிதியுதவியும் கனடா அரசு அறிவித்துள்ளது.

# ஓராண்டிற்குள் புதிய குற்றவியல் சட்டங்களை 100% அமல்படுத்த வேண்டும்! மத்திய அமைச்சர் அமித் ஷா!



புதுடெல்லி, ஆக. 26–

மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை 100 சதவீதம் அமல்படுத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஓராண்டு காலக்கெடு நிர்ணயித்தார். இந்த நடவடிக்கை, குற்றவியல் வழக்குகளை உச்ச நீதிமன்றம் வரையிலான நிலையில் மூன்று ஆண்டுகளுக்குள் முடிவுக்கு கொண்டுவரவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படும் விகிதத்தை 25 சதவீதம் அதிகரிக்கவும் உதவும் என்று அவர் கூறினார். உளவுத்துறையின் இரண்டு நாள் 'தேசிய பாதுகாப்பு உத்திகள் மாநாடு 2026'–இன் நிறைவு விழாவில் உரையாற்றிய அமித் ஷா, தேசிய பாதுகாப்பு உத்திகள் அமைப்பு 15–20 ஆண்டுகளுக்குப் பிறகான பாதுகாப்பு சவால்களை முன்கூட்டியே கணித்து, அவை பெரிய அச்சுறுத்தல்களாக மாறுவதை தடுப்பதற்கான உத்திகளை வகுக்க வேண்டும் என்று கூறினார். பாரதிய நியாய சன்ஹிதா (BNS), பாரதிய நாகரி சுரக்ஷா சன்ஹிதா (BNSS) மற்றும் பாரதிய சாக்ஷ்ய அதிநியம் (BSA) ஆகியவை ஜூலை 1, 2024 அன்று நடைமுறைக்கு வந்தன. இந்த புதிய சட்டங்கள் முறையே பிரிட்டிஷ் காலத்து இந்திய தண்டனை சட்டம் (IPC), குற்றவியல் நடைமுறை சட்டம் (CrPC) மற்றும் இந்திய சாட்சிய சட்டம் (Indian Evidence Act) ஆகியவற்றை மாற்றியமைத்தன.

"அடுத்த ஓராண்டில் மூன்று புதிய சட்டங்களும் 100 சதவீதம் அமல்படுத்தப்படும்; இதன் மூலம் குற்றவியல் வழக்குகளை உச்ச நீதிமன்றம் வரையிலான நிலையில் மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கவும், தண்டனை விகிதத்தை 25 சதவீதம் அதிகரிக்கவும் முடியும்," என்று உள்துறை அமைச்சர் கூறினார்.

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் நெட்வொர்க் மற்றும் அமைப்புகள், ஒன்றிணைந்து செயல்படக்கூடிய குற்றவியல் நீதி அமைப்பு, NatGrid மற்றும் தேசிய தானியங்கி கைரேகை அடையாள அமைப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தரவுத் தளம் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்கால சவால்களை தடுக்கும் வகையில், இளம் அதிகாரிகள் அனைவரும் தரவு ஒருங்கிணைப்பு, பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் குற்ற செயல்பாட்டு முறைகளை கண்டறிதல் ஆகியவற்றின் வாயிலாக செயல்படக்கூடிய உளவு தகவல்களை உருவாக்க வேண்டும் என்று ஷா கூறினார்.

நக்சலைட்டுகள், ஜம்மு–காஷ்மீர் பயங்கரவாதம் மற்றும் வடகிழக்கு கிளர்ச்சி ஆகிய மூன்று முக்கிய உள்நாட்டு பாதுகாப்பு சிக்கல்களால் ஏற்பட்ட சவால்களை அரசு "முடிவுக்கு கொண்டு வந்துள்ளது என்று கூறிய அவர், இந்த சாதனைக்கு அனைத்து மாநிலக் காவல் படைகள், மத்திய முகமைகள் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகள் ஆகியவற்றின் பங்களிப்பே காரணம் என்று பாராட்டினார்.




பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் சென்னை, எழும்பூர், தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில், "தமிழ்த்தென்றல்" திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்களின் 143–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர்.

# கோயில் செயல் அலுவலர் தக்காராக தொடர்வதை தடுக்க வலியுறுத்தல்!




சென்னை, ஆக.26–

கோயில் செயல் அலுவலர்களை தக்காராக தொடர்ந்து செயல்பட அனுமதிக்கக் கூடாது என உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் என்று ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் டி.ஆர்.ரமேஷ் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக செயல் அலுவலரே தக்காராக நியமிக்கப்பட்டு வருவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இதுதொடர்பாக, செயல் அலுவலரை தக்காராக நியமிக்கக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதில் முக்கிய அம்சமாக, கடந்த 1982–ம் ஆண்டு வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவினால் செயல் அலுவலர் கோயிலில் தக்காராக பணிபுரிந்து வருவதாகவும், அந்த உத்தரவு 1991–ல் காலாவதியாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட விதிகளின்படி கோயில் நிர்வாகத்தில் தக்கார் பதவி தனியாக இருக்க வேண்டும் என்றும், செயல் அலுவலரையே தக்காராக நியமிப்பது சட்டப்படி சரியல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கோயில் பழக்கவழக்கங்கள், பூஜை முறைகள் குறித்து தெளிவான அறிவுள்ள ஆன்மிக சான்றோர்களை தக்காராக நியமிக்க வேண்டும் என்றும், நீதிமன்ற உத்தரவை தமிழக அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020